வேலூர் மத்திய சிறைக்கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணைகள்,
முன்னிலை - திரு. க. சண்முக சுந்தரம், எம்,ஏ.,
சிறைக்கண்காணிப்பாளர்.

எண். 11830 / பொ.1 /2016 நாள். 20.08.2016

பொருள் - சிறைகள் - மத்திய சிறை, வேலூர் - M. முருகன், தட்டச்சர் என்பவரது பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் - குறித்து.

பார்வை - 1) தமிழ்நாடு தேர்வாணைக்குழும கடித எண்.793 / PSD-F / 2013, நாள் 17.10.2014

2) கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத்தலைவர் குறிப்பாணை எண்.5872 / E.S 1 / 2013, நாள்.24.10.2014

3) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.11830 / பொ.1/ 2014, நாள் 08.11.2014

------------------

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 2007-2008 முதல் 2012-2013 வரை காலியாக உள்ள தட்டச்சர் பதவிக்கு தகுதி வாய்ந்த நபர்கள் தேர்வு செய்யப்பட்டு திரு. M. முருகன், என்பவரை தெரிவு செய்யப்பட்டதின் அடிப்படையில் பார்வை 2-ல் காணும் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறை தலைவர் குறிப்பாணையின்படி இம்மத்திய சிறையில் காலியாக உள்ள தட்டச்சர் பணியிடத்தில் பணிபுரிய ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து இவர் பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்டு இம்மத்திய சிறையில் கடந்த 07.11.2014 பிற்பகல் முதல் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறார்.

2) திரு. M. முருகன், தட்டச்சர், மத்திய சிறை, வேலூர் என்பவரது பணி அவர் இம்மத்திய சிறையில் பணிக்கு சேர்ந்துள்ள 07.11.2014 பிற்பகல் முதல் சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளை நீதிமன்றத்தில் ஏற்கனவே தொடரப்பட்டு நிலுவையிலுள்ள ரிட் மனுவின் மீது பிறப்பிக்கப்படும் ஆணைக்குட்படுத்தி ( Subject to out come of the Writ petitions relating before the court ) பணி வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

3) "The regularization is subject to outcome of the WPs relating to Group IV 2007- 2008 to 2012 - 2013 recruitment pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon' ble High court of Madras".

4) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணித்தொகுதி பொது விதி எண். 23 (a) (i)- ன் படி, இவ்வாணையில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் இப்பணியாளரின் தகுதிகாண் பருவம் துவங்கும். இவரின் தகுதிகாண் பருவகாலம் தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு பணிக்காலம் ஆகும்.

5) இப்பணியாளர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் " COMPUTER ON OFFICE AUTOMATION" தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

6) இவரது பணிவரன்முறைப்படுத்தப்பட்ட விவரம் இப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டது. இவ்வாணையினைப் பெற்றுக்கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளித்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2018

சிறைக்கண்காணிப்பாளர்,
மத்திய சிறை, வேலூர்-2.

பெறுநர்

திரு. M. முருகன், தட்டச்சர், மத்திய சிறை, வேலூர்-2.

நகல் - கூடுதல் காவல்துறை இயக்குநர் / சிறைத்துறைத் தலைவர் தலைவர், சென்னை -8.
( தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது )
நகல் - சிறைத்துறைத் துணைத் தலைவர், வேலூர் சரகம், வேலூர்-2.
( தவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது )
நகல் - க1 / பொ.3 / கண்காணிப்பாளர் ஆணைப்புத்தகம் / பொ.1 / இருப்புகோப்பு.
நகல் - பணிப்பதிவேடு.